**உறுப்பு,** மற்றும்**இழைய தானம்**

*உறுப்பு, மற்றும் இழைய தானம் என்பது தனிப்பட்ட ஒரு தெரிவாகும். உங்கள் தீர்மானத்தை உங்கள் குடும்பத்தினருடன் பகிருங்கள்.*

**MUHC தாதியர் சிகிச்சையாளர்களால் தயாரிக்கப்பட்டது: கனேடிய இரத்த சேவைகளுடனான கூட்டிணைவுடன் Wendy Sherry & Bernard Tremblay**

**உறுப்பு, மற்றும்இழைய தானம் என்றால் என்ன?**

மற்றவர்கள் தமது உடல்நலத்தை மீளப் பெறும்பொருட்டு நீங்கள் உதவ எடுக்கும் ஒரு தெரிவுதான் உறுப்பு, மற்றும் இழைய தானம் ஆகும். உறுப்பு தானம் ஆரோக்கியமற்ற உறுப்புகளை ஆரோக்கியமான உறுப்புகளினால் மாற்றீடு செய்வதன் மூலம் உயிர்களைக் காக்கின்றது. இழையதானமானது கண்பார்வையை முன்னேற்றுதல் அல்லது ஒரு தீவிரமான தீக்காயத்தின் பின்னரான தொற்றுகளைத் தடுத்தல் என்பவற்றின் மூலம் மக்கள் மேன்மையான வாழ்வைவாழ உதவுகின்றது.

தானமளிக்கப்பட்ட உறுப்புகளும் இழையங்களும் அவை மிகவும் தேவைப்படுகின்றவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இனம், பாலினம், வருமானம் அல்லது பிரபலித்துவ அந்தஸ்து என்பன, யார் தானமளிக்கப்பட்ட உறுப்புகளைப் பெறுவர் என்பதனைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச்செலுத்தாது.

தானமளிக்கும் செயற்பாட்டில் உங்கள் உடலினது பராமரிப்பும் மரியாதையும் மிக முக்கியமான ஓர் அம்சமாகும். உறுப்புகள், வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை அறையொன்றில் அறுவைசிகிச்சையின்போது அகற்றப்பட்டு தேவைப்படும் நபரிடம் கொண்டுவரப்படுகின்றன. இழையமும் கண்களும் அப்போது அகற்றப்படுகின்றன. திறந்த பிரேதப்பெட்டி இறுதிச்சடங்கு ஒழுங்குகள் ஒரு தெரிவாக தொடர்ந்தும் அமையும்.

**எந்த உறுப்புகளும் இழையங்களும் தானம் செய்யப்படமுடியும்?**

தானம் வழங்கப்படக்கூடிய உறுப்புகளும் இழையங்களுமாவன:

*உறுப்புகள்*
இருதயம், நுரையீரல்கள், சதையி, சதைய தீவுக்கலங்கள், ஈரல், சிறுநீரகங்கள், இரைப்பை, சிறுகுடல்கள்

*இழையங்கள்*
விழிவெண்படலங்கள், விழிவெண்கோளத்தைச் சுற்றியுள்ள தோல், சருமம், இதயவால்வுகள், எலும்பு, தசைநாண்கள்

**யார் தானம் செய்யமுடியும்?**

புதிதாகப் பிறந்த குழந்தை முதல் வயதான முதியோர்கள் வரை எல்லோருமே தானமளிக்கத் தகைமை உடையவர்கள். உறுப்பு அல்லது இழைய தான நிறுவனங்கள் ஒவ்வொருவரையும் அவர்கள் என்ன உறுப்புகள், இழையங்கள் தானமளிக்க முடியும் எனத் தனித்தனியாக மதிப்பிடும்.

*ஈற்றிலே நிகழப்போகும் ஒருவரது மரணம் பற்றிக் கதைப்பது உங்களுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தினருக்கும் கடினமானதாக இருக்கலாம்.*

**நான் சுகயீனமுற்றிருந்தால்கூட தானமளிக்க முடியுமா?**

ஒரு மருத்துவ நிலைமை அல்லது பாரதூரமான சுகயீனம் நீங்கள் தானமளிக்கக்கூடிய தகைமையிலிருந்து உங்களை விலக்குவதில்லை. நேரம்வரும்போது தானமளிக்கக்கூடியவர்கள் அனைவரும் தனித்தனியாக,மருத்துவரீதியாக, ஒவ்வொருவரதுவிடயரீதியான அடிப்படையில் மதிப்பிடப்படுவர்.

**நான் இதுபற்றி எப்போது சிந்திக்கத் தொடங்கவேண்டும்?**

நீங்கள் உயிருடன் இருக்கும்போது இறப்புப்பற்றிக் கதைப்பது கடினமாக இருக்கலாம். ஆனாலும் ஒரு உறுப்பு மற்றும் இழையம் தானமளிப்பவராகப் பதிவுசெய்வது பற்றிய உங்கள் முடிவு சம்பந்தமாகக் கதைப்பது மிகவும் முக்கியமாகும். உங்கள் அன்புக்குரியவர்கள் உங்கள் வாழ்வின் இறுதியில் உங்கள் விருப்பங்களுக்கு மதிப்பளித்து உறுதிசெய்ய சம்மதிக்க வேண்டும்: நீங்கள் ஏற்கனவே இதுகுறித்துக் கதைத்து வைத்திருந்தால், சரியானதைச் செய்ய அவர்களுக்கு இலகுவாக இருக்கும்.

நீங்கள் தானமளிக்க எண்ணுவீர்களாயின், உங்கள் குடும்ப வைத்தியருடன் அல்லது மாகாண தானமளிப்புத் திட்டத்தினருடன் பேசுங்கள்.

**நான் எவ்வாறு தானமளிக்கமுடியும்?**

உங்கள் மாகாணத்தில் ஒரு உறுப்பு, இழைய தானமளிப்பவராகப் பதிவுசெய்யும் இணைப்பு:

- https://www.donateyourorgans.ca/#register

உங்கள் முடிவு எதுவாக இருப்பினும், பொருத்தமான மருத்துவ பராமரிப்பினை எப்போதும் நீங்கள் பெறுவீர்கள். நீங்கள் தானமளிக்க அல்லது தானமளிக்காதுவிடுவது பற்றி உங்கள் குடும்பத்தினருடன் கதையுங்கள். உங்கள் தெரிவுக்கு எப்போதும் மரியாதை அளிக்கப்படும்.

மருத்துவரினால் நீங்கள் இறந்துவிட்டீர்கள் என உறுதிகூறப்பட்ட பின்னர்தான் உங்கள் தானமளிப்பு இடம்பெறும் என்பதனை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

உங்கள் வாழ்வின் இறுதியில்  உறுப்புகள், இழையதானம் வழங்குவதற்கு நீங்கள் எடுக்கும் முடிவு, பிறர் அவர்களது இறப்புவரை வாழ்வினைத் தொடர்வதற்கு உதவுகின்றது.

மேலதிக தகவலுக்கு, பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு OTDT@blood.ca. மின்னஞ்சல் அனுப்புங்கள்.